From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2014

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரபாண்டியன் | Father/Husband Name | : சேதுராமன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 26.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 26.05.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் சூரக்குண்டில் குடியிருந்து கொண்டு சுமார் 5 வருடமாக விவசாயம் செய்து வருகிறேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் பழனிச்சாமி மற்றும் பிரசாத் ஆகியோர்களை தெரியும். நிகழ்வு நிலை புகார்தாரர் கரிகாலனை எனக்கு தெரியும். எதிரிகள் ராஜேந்திரபிரசாத், செல்லபாண்டி, தவமணி, சிலம்பரசன், ராஜ்குமார் மற்றும் மணிகன்டன், காத்தமலைச்சாமி, ஆறுமுகம், தமிழ் முகுந்தன் ஆகியோர்களை எனக்கு தெரியும். 2005ம் ஆண்டு மேலூர் அரசு கலை கல்லுரியில் சுமார் 3 நாட்கள் விளையாட்டு போட்டி நடைபெற்றது. கரிகாலன் மற்றும் எதிரிகள் அனைவரும் கல்லூரியில் அச்சமயம் படித்துக்கொண்டிருந்தார்கள். விளையாட்டு போட்டியின்போது பிரச்சனை ஏற்பட்டது, எங்கள் 11 நபர்கள் மீதும் வேறு ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் புகாரை மகேந்திரன் கொடுத்தார். அந்த வழக்கு மதுரை PCR நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. சம்பவத்தின்போது காலை 11.00 மணிக்கு நான், கரிகாலன்,

பிரதிவிராஜ், தினேஷ் குமார் கல்லுரிக்கு பின்புறமாக நடந்து சென்றோம். அப்போது வழக்கின் எதிரிகள் மேற்கு புறமாக சுமார் 10, 15 பேர் நடந்து வந்தார்கள், அவர்கள் கட்டை, கம்பு ஆகியவற்றோடு வந்து எங்களை தாக்கினார்கள். எதிரிகள் கல்லுரியில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு அவர்கள் கொண்டு வந்த கத்தி, கட்டையால் தாக்கினார்கள். என்னை எதிரிகள் கையில் கத்தியாலும், நெஞ்சில் கட்டையாலும் தாக்கினார்கள். கட்டையில் தாக்கியதில் எனக்கு காயம் ஏற்பட்டது. முன் கையில் கத்தியால் கிழித்த காயம் ஏற்பட்டது. அப்போது என்னுடன் இருந்த கரிகாலன், தினேஷ் பிரதிவிராஜன், முருகன் ஆகியோர்கள் எதிரிகளால் தாக்கப்பட்டனர். எதிரிகள் தாக்கியவுடன் நாங்கள் கத்தினோம். கத்திய சத்தம் கேட்டு அங்கு சென்று கொண்டிருந்த நபர்கள் அங்கு வந்தவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். அப்போது வினோத், மற்றும் சுப்பிரமணி ஆகிய இருவரும் காயம்பட்ட என்னையும், என்னுடன் இருந்தவர்களையும் மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அப்போது நான் மயக்க நிலையில் இருந்தேன். மருத்துவமனையில் நான் சுமார் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்வதற்கு முந்தைய நாளே எதிரிகள்தரப்பில் ஒருவர் கொடுத்த புகாரின்பேரில் மேலூர் போலீசார் குற்ற எண் 245/2005, வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் என் மீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் தேதிக்கு முன்தினமான 11.05.2005 தேதியன்றே எனது கல்லூரி காலவரையற்ற விடுப்பு செய்யப்பட்டது என்றால் அது எங்களுக்கு தெரியாது மறுதினம் கல்லூரிக்கு சென்றபோதுதான் தெரியும். அதேபோல் எங்கள் கல்லூரி நுழைவு வாயில் திருச்சி – மதுரை மெயின்ரோட்டை நோக்கி உள்ளது என்றால் சரிதான்.

2) நான் சொன்ன என் மீது போடப்பட்டுள்ள வழக்கு எதிரி தரப்பில் சமரசம் செய்யப்பட்டு சமரச மனு தாக்கல் செய்து அதன் பேரில் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு சமரசம் மனுப்பற்றி தெரியும், அதில் நானும், கையொப்பம் செய்துள்ளேன், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கரிகாலன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு பின்பு மருத்துவமனை வந்தாரா என்றால் நான் அன்று மயக்கநிலையில் இருந்தேன், சரியாக தெரியாது. நான் எத்தனை நாள் மயக்கநிலையில் இருந்தேன் என்றால் ஒரு நாள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். என்னை மேலூர் போலீசார் எங்கு வைத்து, எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரிகள் என்னை தாக்கவில்லை, நாங்கள்தான் சம்பவ தேதிக்கு முன்பே எதிரிகளை அடித்து, அது சம்மந்தமாக என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, மகேந்திரன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எங்கள் கல்லூரியில் நடவடிக்கை எடுக்க சொல்லி மகேந்திரனின் சமூகத்தை சேர்ந்த மாணவர்கள் கல்லூரியில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினார்கள் என்றால் அதைபற்றி எனக்கு

தெரியாது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை, கரிகாலனுக்கும் எனக்கும் மற்ற நபர்களுக்கும் காயம் என்றும், அவர்கள் எங்களை கைது செய்ய சொல்லி உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் வழக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னை போலீசார் மருத்துவமனையில் எந்த தேதியில், எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.